**நீதித்துறை நடுவர் எண் 2 நீதிமன்றம் இராமநாதபுரம்**

**முன்னிலை** **திரு. A. ஆதியான், B.A. B.L.**
நீதித்துறை நடுவர் எண்.2.
இராமநாதபுரம்.

**2026ம் வருடம் ஜீன் மாதம் 08-ம் நாள் திங்கள்கிழமை**
**திருவள்ளுவர் ஆண்டு 2057 ஸ்ரீ பராபவ வருடம் வைகாசி திங்கள் 25ம் நாள்**
**ஆண்டுப்பட்டிகை வழக்கு எண். 607/2025**

**CNR NO. TNRM02-003983-2025**

| | | | |
|---|---|---|---|
| 1. | காவல் நிலையத்தின் பெயர் மற்றும் குற்ற எண் | : | அரசுக்காக,<br>சார்பு ஆய்வாளர்,<br>கேணிக்கரை காவல் நிலையம்,<br>குற்ற எண். 43/2015 |

**எதிரியின் விபரம்**

| | | | |
|---|---|---|---|
| 2. | பெயர் | : | கோவிந்தன் |
| 3. | த/பெ | : | கூத்தன் |
| 4. | தொழில் | : | கூலி |
| 5. | முகவரி | : | புல்லங்குடி<br>இராமநாதபுரம். |
| 6. | வயது | : | 47 |
| 7. | சம்பவ நாள் | : | 16.01.2015-ம் தேதி மாலை சுமார் 18.00 மணியளவில் |
| 8. | புகார் தேதி | : | 23.01.2015-ம் தேதி |
| 9. | எதிரி கைது செய்யப்பட்ட நாள் | : | 27.01.2015 |
| 10. | பிணையில் விடுவிக்கப்பட்ட நாள் | : | 27.01.2015 |
| 11. | கோப்பிற்கு எடுக்கப்பட்ட நாள் | : | 21.08.2025 |
| 12. | விசாரணை துவங்கப்பட்ட நாள் | : | 16.03.2026 |
| 13. | விசாரணை முடிவுற்ற நாள் | : | 29.05.2026 |
| 14. | குற்றம் சாட்டப்பட்டது | : | எதிரிக்கு எதிராக இதச பிரிவுகள் 294(b), 506(i)ன் கீழ் குற்றம் சாட்டப்பட்டது. |

| | | | |
|---|---|---|---|
| | குற்றம் வனையப்பட்டது | : | எதிரியின் மீது 294(b), 506(i)ன் கீழ் குற்றசாட்டுகள் வனையப்பட்டது. |
| 15. | காலதாமதத்திற்கான காரணம் | : | இல்லை |
| 16. | அரசு தரப்பு சாட்சிகள் | : | முதல் விசாரணை — குறுக்கு விசாரணை<br>அ.சா.1 – 18.03.2026 — 18.03.2026<br>அ.சா.2 – 18.03.2026 — 18.03.2026<br>அ.சா.3 – 27.05.2026 — 27.05.2026 |
| 17. | எதிரியிடம் பிரிவு 313(1)(b) Cr.P.C படி விசாரணை செய்யப்பட்ட நாள் | : | 29.05.2026 |
| 18. | எதிரி தரப்பு சாட்சிகள் | : | இல்லை |
| 19. | எதிரி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட 311 Cr.P.C/348 BNSS பிரிவின் படியான மனுக்கள் | : | 1) புலன்விசாரணை அதிகாரியான திரு. கணேசலிங்கபாண்டி என்பவர் பணிமாறுதலாகி சென்றுவிட்டபடியால் திரு. பூமி என்பவரை கூடுதல் சாட்சியாக விசாரணை செய்வதற்கு அரசு தரப்பில் பிரிவு 311 Cr.P.C/348 BNSS–ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு இந்நீதிமன்ற Cr.M.P.No.530/2026 ல் கோப்பிற்கு எடுக்கப்பட்டு 27.05.2026–ம் தேதியன்று அனுமதிக்கப்பட்டது. |
| 20. | எதிரிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட 320 Cr.P.C/359 BNSS பிரிவின் படியான மனுக்கள் | : | எதிரி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட சமரச மனுவானது 18.03.2026 ம் தேதியன்று தள்ளுபடி செய்யப்பட்டது. |
| 21. | அரசு தரப்பு வழக்கறிஞர் | : | திரு. சொக்கேசன் |
| 22. | எதிரி தரப்பு வழக்கறிஞர் | : | திரு. ஜெயினுலாபுதீன் |
| 23. | எதிரியின் கூற்று | : | எதிரி தன் மீதான குற்றச்சாட்டுகளை மறுத்து பொய் வழக்கு என்று கூறினார். |
| 24. | தீர்ப்புரை பிறப்பிக்கப்பட்ட நாள் | : | 08.06.2026 |
| 25. | வழக்கின் முடிவு குறித்து எதிரிக்கு தகவல் | : | 08.06.2026 |

தெரிவிக்கப்பட்ட நாள்

| | | |
|---|---|---|
| 26. நீதிபதியின் முடிவு | : | இறுதியாக, எதிரிக்கு எதிரான இதச பிரிவு 294(b), 506(i)ன் கீழான குற்றச்சாட்டுகளின் கீழ் எதிரி குற்றவாளி இல்லை என்று முடிவு செய்து எதிரியை மேற்கண்ட குற்றச்சாட்டுகளிலிருந்து விடுதலை செய்து 248(1) Cr.P.C/271(1) BNSS ன் கீழ் இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கப்படுகின்றது. எதிரியின் பிணைப்பத்திரம் மேல்முறையீட்டு காலம் வரை அமலில் இருக்கும் எனவும், மேல்முறையீட்டு காலத்திற்கு பிறகு எதிரியின் பிணைபத்திரம் ரத்தாகும் என உத்தரவிடப்படுகிறது. இந்த வழக்கில் வழக்கு சொத்து எதுவுமில்லாததால் வழக்கு சொத்து குறித்து உத்தரவு எதுவுமில்லை. |

இவ்வழக்கு கடந்த 21.08.2025ம் தேதியன்று இந்நீதிமன்றக் கோப்பிற்கு எடுக்கப்பட்டு கடந்த 29.05.2026ம் தேதியன்று இந்நீதிமன்றத்தின் முன்பு இறுதி விசாரணைக்கு வந்தபோது அரசுத்தரப்பில் கற்றறிந்த அரசு குற்றவியல் வழக்குரைஞர் நிலை – 2 அவர்கள் ஆஜராகியும், எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. ஜெயினுலாபுதீன் அவர்கள் ஆஜராகியும் இருதரப்பிலும் எடுத்துரைக்கப்பட்ட வாதங்களைக் கேட்டறிந்தும், இவ்வழக்கு ஆவணங்கள் மற்றும் சாட்சியம், சான்றாவணங்களை பரிசீலனை செய்தும் இதுநாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்தும் வந்த இவ்வழக்கில் இறுதியாக இன்று இந்நீதிமன்றம் வழங்கும்....

## <u>தீர்ப்புரை</u>

### <u>02) அரசு தரப்பு வழக்கின் சுருக்கம் –</u>

16.01.2015–ம் தேதி மாலை 18.00 மணிக்கு நிகழ்நிலை புகார்தாரர் வேலையை பார்த்துவிட்டு சொந்த ஊர் செல்வதற்காக கேணிக்கரை பஸ் ஸ்டாப்பில் நின்று கொண்டிருக்கும்போது எதிரி நிகழ்நிலை புகார்தாரரை பார்த்து நீயெல்லாம் ஒரு பெரிய மனுசனாடா எனக்கு எதிரா என் மீது எஸ்பிகிட்ட மனு கொடுத்திங்க நீங்க எல்லாம் சேர்ந்து என் மயிரக்கூட பிடுங்க முடியாது என அசிங்கமான கெட்ட வார்த்தைகளால்

பேசியும், கொலை மிரட்டல் விடுத்ததாக நிகழ்நிலை புகார்தாரர் எதிரி மீது புகார் கொடுத்துள்ளார். மேற்படி புகாரின்பேரில் எதிரிக்கு எதிராக இதச பிரிவு 294(b) மற்றும் 506(i)–ன் கீழ் குற்ற எண். 43/2015 ல் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து, பின்பு இவ்வழக்கின் புலன்விசாரணையை முடித்து எதிரி மீது இதச பிரிவுகள் 294(b), 506(i)–ன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்துள்ளதாக எதிரி மீது குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**03)** குற்ற இறுதியறிக்கையை பரிசீலனை செய்து எதிரிக்கு எதிராக இவ்வழக்கு ஆண்டுபட்டிகை வழக்கு எண். 607/2025 ஆக இந்நீதிமன்ற கோப்பிற்கு எடுக்கப்பட்டு, எதிரிக்கு அழைப்பாணை அனுப்ப உத்தரவிடப்பட்டது. எதிரி இந்நீதிமன்றத்தில் ஆஜரானபோது, அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட வழக்காவணங்களின் நகல்கள் அனைத்தும் எதிரிக்கு இலவசமாக கு.வி.மு.ச பிரிவு 207 ன் படி வழங்கப்பட்டும், போதிய கால அவகாசம் வழங்கப்பட்டும், வழக்காவணங்களை பரிசீலனை செய்ததில் எதிரிக்கு எதிராக குற்றச்சாட்டுகள் வனைய முகாந்திரம் உள்ளது என இந்நீதிமன்றம் முடிவு செய்து கு.வி.மு.ச பிரிவு 240 ன் படி எதிரியின் செய்கையானது இதச பிரிவுகள் 294(b), 506(i)ன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றம் என குற்றச்சாட்டுகள் வனைந்து எதிரிக்கு புரியும்படி தமிழ் மொழியில் குற்றச்சாட்டுகளை விளக்கிக் கூறி எதிரிடம் வினவியபோது எதிரி குற்றச்சாட்டுகளை மறுத்து, வழக்கு விசாரணையை எதிர் கொள்வதாக கூறி வழக்கு விசாரணைக்கு வேண்டினார். அதனால் அரசு தரப்பு சாட்சிகளை விசாரணை செய்ய இந்நீதிமன்றம் அரசு தரப்பு சாட்சிகளுக்கு அழைப்பாணை அனுப்ப உத்தரவிட்டது.

**04)** அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.3 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.6 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. புகார் மனுவில் உள்ள கையொப்பம் அ.சா.ஆ. 1 ஆகவும், பார்வைமகஜரில் உள்ள இரண்டாவது கையெழுத்து அ.சா.ஆ.2 ஆகவும், முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆகவும், புகார் மனு அ.சா.ஆ.4 ஆகவும், மாதிரி வரைபடம் அ.சா.ஆ 5 ஆகவும், பார்வைமகஜர் அ.சா.ஆ. 6 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது. 2

முதல் 4 மற்றும் 6 வரையிலான பட்டியல் சாட்சிகள் விசாரிக்கப்படாமல் அரசு தரப்பில் நீக்கறவு செய்யப்பட்டு அரசு தரப்பில் சாட்சியங்கள் முடிக்கப்பட்டது. அரசு தரப்பில் சான்றுப்பொருட்கள் எதுவும் இவ்வழக்கில் குறியீடு செய்யப்படவில்லை.

**05)** இவ்வழக்கின் நிகழ்நிலை புகார்தாரரான அ.சா.1, பார்வைமகஜர் சாட்சியான அ.சா.2 ஆகியோர்கள் தனது சாட்சியத்தில் அரசு தரப்பு வழக்கிலிருந்து வேறுபட்டு பிறழ்சாட்சியாக மாறி சாட்சியமளித்துள்ளார்கள். இவ்வழக்கில் கூடுதல் சாட்சியாக விசாரிக்கப்பட்டுள்ள அ.சா.3 இவ்வழக்கின் புலன்விசாரணை அதிகாரி தாக்கல் செய்த ஆவணங்களின் அடிப்படையில் கடந்த 23.01.2015 ம் தேதி 19.00 மணி அளவில் சார்பு ஆய்வாளர் கணேசலிங்கபாண்டி நிலைய பொறுப்பில் இருந்தபோது இராமநாதபுரம் புல்லங்குடி முனியாண்டி பிள்ளை மகன் பாலுச்சாமி நிலையம் ஆஜராகி ஆய்வாளரிடம் கொடுத்த புகார் மனுவை பெற்று நிலை மனு ரசீது எண். 28/2015 பதிவு செய்து அதன் அடிப்படையில் கேணிக்கரை காவல்நிலைய குற்ற எண். 43/2015 பிரிவுகள் 294(b), 506(i) இதசவாக வழக்கு பதிவு செய்து புகார் மனு மற்றும் முதல் தகவல் அறிக்கையின் அசலை சமூகம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தும், இதர நகல்களை சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கு அனுப்பி வைத்தும் ஒரு நகலை சார்பு ஆய்வாளர் திரு.கணேசலிங்கபாண்டி தனது விசாரணைக்கு எடுத்துக்கொண்டு அன்றைய தினமே 20.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சம்பவ இட சாட்சிகள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வைமகஜர் (அ.சா.ஆ.6) மற்றும் மாதிரி வரைபடம் (அ.சா.ஆ.5) தயார் செய்துள்ளார். பின்னர் பட்டியல் சாட்சிகளை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். சம்பவம் உண்மை என தெரிய வந்ததால் எதிரியை கடந்த 27.01.2015–ம் தேதி அன்று இரவு சுமார் 19.30 மணியளவில் இராமநாதபுரம் புதிய பேருந்துநிலையம் அருகில் வைத்து உச்ச நீதிமன்ற வழிகாட்டுதல்களை பின்பற்றி கைது செய்து அவரை நிலைய பிணையில் விடுவித்துள்ளார். இத்துடன் வழக்கு விசாரணையை முடித்து எதிரி மீது 294(பி), 506(1) இதச படி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார். அ.சா.3 ன் சாட்சியத்துடன் அரசு தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டது.

**06)** அரசு தரப்பு சாட்சியங்களின் விசாரணை முடிவடைந்ததும் அரசுதரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்களில் எதிரிக்கு பாதகமாக தோன்றும் சாட்சியப் பகுதிகளை தொகுத்து கு.வி.மு.ச பிரிவு 313(1)(ஆ)ன் படி விளக்கிக்கூறி எதிரியிடம் வினவியபோது எதிரி அரசுதரப்பு சாட்சிகள் கூறுவது பொய் என்றும், பொய் வழக்கு போடப்பட்டுள்ளதாகவும், தான் குற்றவாளி இல்லை என்றும், எதிரி தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லை என்றும் கூறினார். எதிரி தரப்பில் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை, சான்றாவணம் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

**07) <u>தீர்வுக்குரிய பிரச்சனை</u>**

இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது. அரசுத்தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்தும் குறியீடு செய்யப்பட்டுள்ள சான்றாவணங்களில் இருந்தும் இருதரப்பு வாதங்களில் இருந்தும் வழக்கு ஆவணங்களைப் பரிசீலனை செய்ததில் இருந்தும், தற்போது தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சனை யாதெனில் எதிரிக்கு எதிராக இதச பிரிவுகள் 294(b), 506(i) ன் கீழ் சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் அரசு தரப்பில் நியாயமான சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதே தீர்வுக்குரிய பிரச்சனையாகும்.

**08)** கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் தனது வாதுரையில், அ.சா.3 ன் சாட்சியம் மற்றும் அ.சா.ஆ. 1 முதல் அ.சா.ஆ. 6 வரையிலான சான்றாவணங்கள் மூலமாக எதிரிக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்பட்டுள்ளது என்றும், எனவே எதிரிக்கு உரிய தண்டனை வழங்கப்படவேண்டும் என வாதிட்டார்.

**09)** எதிரி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதுரையில் நிகழ்நிலை புகார்தாரரான அ.சா.1, பார்வைமகஜர் சாட்சியான அ.சா.2 ஆகியோர்கள் பிறழ்சாட்சிகளாக மாறி சாட்சியமளித்துள்ளார்கள் என்றும், அ.சா.3 ன் சாட்சியத்தை உறுதிசெய்யும் வகையில் பிறழ்சாட்சிகள் யாரும் சாட்சியம் அளிக்கவில்லை என்றும், எதிரி மீதான

குற்றச்சாட்டுகள் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்படவில்லை என்றும், எனவே சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளித்து விடுதலை செய்யவேண்டுமென்றும் வாதிட்டார்.

<u>10) தீர்வு :–</u>

i) இருதரப்பு வாதத்தின் அடிப்படையிலும் வழக்கு கோப்பினை பரிசீலனை செய்ததின் அடிப்படையில் அ.சா.1 கடந்த 23.01.2015–ம் தேதியன்று எதிரிக்கு எதிராக புகார் கொடுத்துள்ளார் என்பதை அறியமுடிகிறது. அ.சா.1 கொடுத்த புகாரின் அடிப்படையில் எதிரிக்கு எதிராக இதச பிரிவுகள் 294(b), 506(i) –ன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்துள்ளதாக குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்யப்பட்டு, இவ்வழக்கு ஆண்டுப்பட்டிகை வழக்கு எண். 607/2025 ஆக இந்நீதிமன்ற கோப்பிற்கு எடுக்கப்பட்டு எதிரியின் மீது இதச பிரிவுகள் 294(b), 506(i) –ன் கீழ் குற்றச்சாட்டுகள் வனையப்பட்டுள்ளது தெரியவருகிறது.

**II)** இவ்வழக்கின் நிகழ்நிலை புகார்தாரர் அ.சா.1 தனது முதல் விசாரணையில் "**கடந்த 10 வருடங்களுக்கு முன்பாக காவல்நிலையம் சென்றிருந்தேன். அப்போது என்னிடம் கையெழுத்து வாங்கினார்கள் எதற்கு வாங்கினார்கள் என்று தெரியாது. புகார்மனுவில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். புகார் மனுவில் உள்ள விவரங்கள் எதுவும் எனக்கு தெரியாது**". என்று சாட்சியமளித்துள்ளார். மேலும் பார்வைமகஜர் சாட்சியான அ.சா.2 தனது சாட்சியத்தில் "**பார்வைமகஜரில் உள்ள விவரங்கள் எதுவும் எனக்கு தெரியாது**" என்று சாட்சியமளித்துள்ளார். எனவே அ.சா.1 மற்றும் அ.சா.2 சாட்சிகளை அரசு தரப்பில் பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்யப்பட்டது. ஆனால் அ.சா.1 மற்றும் அ.சா.2 சாட்சிகள் அரசு வழக்கிற்கு ஆதரவாக சாட்சியமளிக்கவில்லை. எனவே அ.சா.1 மற்றும் அ.சா.2 சாட்சிகளின் சாட்சியம் எதிரிக்கு எதிரான குற்றச்சாட்டுகளை நிரூபணம் செய்யும் வகையில் அமையவில்லை.

**iii)** அரசு தரப்பு வழக்கறிஞர் நிகழ்நிலை புகார்தாரரான அ.சா.1 மற்றும் பார்வைமகஜர்

சாட்சியான அ.சா.2 ஆகியோர்கள் அரசு தரப்பு வழக்கிற்கு மாறுபட்டு பாதகமாக சாட்சியமளித்துள்ளதால், மற்ற சாட்சிகளை விசாரிப்பதனால் அரசு தரப்பு வழக்கை நிரூபிக்க வாய்ப்பு இல்லை என்றும், பட்டியல் சாட்சிகளான 2 முதல் 4 சாட்சிகளை விசாரிப்பதனால் இந்நீதிமன்றத்தின் நேரம் தான் வீணாகும் என்றும், பட்டியல் சாட்களான 2 முதல் 4 சாட்சிகளை விசாரிக்காமல் விலக்கு அளித்து அரசு தரப்பு சாட்சிகளை முடித்துள்ளார். இவ்வழக்கில் அரசு தரப்பிற்கு ஆதரவாக கூடுதல் சாட்சியாக கேணிக்கரை காவல்நிலைய சிறப்பு சார்பு ஆய்வாளர் அ.சா.3 ஆக சாட்சியமளித்துள்ளார். மேற்படி அ.சா.3 ன் சாட்சியமானது இவ்வழக்கின் புலன் விசாரணை தொடர்பாக ஆவணங்களின் அடிப்படையில் அரசு பணியை செய்யும் போது சொன்ன சாட்சியமாகவே கருதமுடியும். எனவே அ.சா.3 ன் சாட்சியத்தை வைத்து மட்டுமே எதிரி தான் குற்றவாளி என தீர்மானிக்க முடியாது. ஆகவே எதிரி மீதான குற்றச்சாட்டுகளை அரசு தரப்பு போதிய சாட்சிய சான்றாவணங்களின் அடிப்படையில் நியாயமான சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கத் தவறிவிட்டதாகவே இந்நீதிமன்றம் கருகின்றது.

**iv)** எனவே எதிரிக்கு எதிராக இதச பிரிவுகள் 294(b), 506(i) ன் கீழ் சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் அரசு தரப்பில் உரிய சாட்சிய, சான்றாவணங்கள் மூலமாக நியாயமான சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்று இந்த நீதிமன்றம் முடிவு செய்து சந்தேகத்தின் பலனை எதிரிக்கு வழங்கி இவ்வழக்கில் குற்றம்சாட்டப்பட்ட எதிரி மேற்கண்ட குற்றச்சாட்டுகளில் குற்றவாளி இல்லை என இந்த பிரச்சனைக்கு இந்நீதிமன்றம் முடிவு காண்கிறது.

**11)** இறுதியாக எதிரிக்கு எதிரான இதச பிரிவுகள் 294(b), 506(i)–ன் கீழான குற்றச்சாட்டுகளின் கீழ் எதிரி குற்றவாளி இல்லை என்று முடிவு செய்து, எதிரியை மேற்கண்ட குற்றச்சாட்டுகளிலிருந்து விடுதலை செய்து 248(1) Cr.P.C/271(1) BNSS–ன் கீழ் இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கப்படுகின்றது. எதிரியின் பிணைப்பத்திரம் மேல்முறையீட்டு காலம் வரை அமலில் இருக்கும் எனவும், மேல்முறையீட்டு காலத்திற்கு பிறகு எதிரியின் பிணைபத்திரம் ரத்தாகும் என உத்தரவிடப்படுகிறது. இந்த

வழக்கில் வழக்கு சொத்து எதுவுமில்லாததால் வழக்கு சொத்து குறித்த உத்தரவு எதுவுமில்லை.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் என் முன்பாக நேரடியாக நீதிமன்ற கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைகள் திருத்தப்பட்டு இன்று 2026–ம் ஆண்டு ஜீன் திங்கள் 08ம் நாள், திங்கள்கிழமை திறந்த இந்நீதிமன்றத்தில் என்னால் அவையறியப்பகரப்பட்டது.

A AATHIYAN Digitally signed by A AATHIYAN Date: 2026.06.08 15:35:56 +0530

நீதித்துறை நடுவர் எண்.2
இராமநாதபுரம்

**1. அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகள்**

| வ.எண் | சாட்சிகள் | பெயர் |
|---|---|---|
| 1. | அ.சா.1 | திரு. பாலுச்சாமி (நிகழ்நிலை புகார்தாரர்) |
| 2. | அ.சா.2 | திரு. சண்முகவேல் (பார்வைமகஜர் சாட்சி) |
| 3. | அ.சா.3 | திரு. பூமி (கூடுதல் சாட்சி) |

**2. அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட சான்றாவணங்கள்**

| வ.எண் | சான்றாவணங்கள் | தேதி | விபரம் |
|---|---|---|---|
| 1. | அ.சா.ஆ.1 | 23.01.2015 | புகார் மனுவில் உள்ள கையொப்பம் |
| 2. | அ.சா.ஆ.2 | 23.01.2015 | பார்வைமகஜரில் உள்ள இரண்டாவது கையொப்பம் |
| 3. | அ.சா.ஆ.3 | 23.01.2015 | முதல் தகவல் அறிக்கை |
| 4. | அ.சா.ஆ.4 | 23.01.2015 | புகார் மனு |
| 5. | அ.சா.ஆ.5 | 23.01.2015 | மாதிரி வரைபடம் |
| 6. | அ.சா.ஆ.6 | 23.01.2015 | பார்வைமகஜர் |

3. **அரசு தரப்பில் சான்றுபொருட்கள்** – இல்லை

**4. <u>எதிரி தரப்பில் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் மற்றும் சான்று பொருட்கள்</u>** – இல்லை

**5. <u>குறிப்பு</u>**

1. எதிரி விடுதலை செய்யப்பட்டார்.
2. எதிரி விசாரணைக் காலத்தில் பிணையில் இருந்தார்.
3. எந்த சாட்சியும் 3 தினங்களுக்கு மேல் விசாரிக்காமல் நிறுத்தி வைக்கப்படவில்லை.
4. வழக்கின் முடிவு காவல்துறைக்கு தெரிவிக்கப்பட்டது.

A AATHIYAN Digitally signed by A AATHIYAN Date: 2026.06.08 15:36:02 +0530

நீதித்துறை நடுவர் எண்.2
இராமநாதபுரம்